செய்தி வெளியீடு எண் : 1466 நாள் : 24.07.2023

# நிலஅளவை மற்றும் பதிவேடுகள் துறையில் 14 ஆய்வாளர்கள் உதவி இயக்குநர்களாக பதவி உயர்வு

மாண்பமை உச்சநீதிமன்றம் நிலஅளவை மற்றும் பதிவேடுகள் துறையில் பதவி உயர்வு அளிக்கும்போது பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டினை பின்பற்றி பதவி உயர்வு அளிக்கும்படி தீர்ப்புரை வழங்கியது. மாண்பமை உச்சநீதிமன்றம் வழங்கிய ஆணையின்படி நிலஅளவை மற்றும் பதிவேடுகள் துறையில் 2004–ஆம் ஆண்டு முதல் 2021–ஆம் ஆண்டு வரை வெளியிடப்பட்ட உதவி இயக்குநர் பதவி உயர்வு பட்டியல்களில் பணிமூப்பின் உரிய திருத்தங்கள் செய்து ஆய்வாளர்களாக பணிபுரிந்த 3 நபர்களுக்கு உதவி இயக்குநராக பதவி உயர்வு வழங்கி, அரசு ஆணைகள் வெளியிடப்பட்டன. தற்போது, 2022–ஆம் ஆண்டிற்கான காலிப்பணிடங்களுக்கு ஆய்வாளர்களாக பணிபுரியும் 14 நபர்களுக்கு உதவி இயக்குநர்களாக பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in